1788

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 DEC 1924
MADRAS

# சிவானந்த போதம்

ன] [விலை அணா 4

Q23:417
N24
181853

ஓம்

பரப்ரஹ்மணே நம:

# சிவானந்த போதம்

இஃது

நன்கு பரிசோதிக்கப்பட்டு, பல திருத்துப்பாடுகளுடன்
செய்யுள் முதற்குறிப் பகராதியும் சேர்த்துப்
பதிப்பிக்கப்பட்டுள்ளது.

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை,
87, தம்புசெட்டி வீதி, சென்னை.

1924

விலை அணா 4

[All Rights Reserved]

1798
1424
...ICE OF THE REGIS...
23 DEC 192...
MADRAS
Pachaiappan.

1788

உ

சிவமயம்

# சிவானந்த போதம்

## காப்பு

### வெண்பா

சிவானந்த போதகமாஞ் சித்திமுத்தி தந்து
பவானந்த மானவினை பாழாம்—நவானந்த
ஈசனே தானாகு மென்வடிவுத் தாளிணையைப்
பாசமுடன் றொழுவார் பார். (1)

தியாகரருள் போதஞ் சிவசுந்த ரன்சொல்
தயாபரியென் றுய்வடிவந் தானும்—செயாவெனவே
பொய்யா விநாயகனும் பொற்குருவாஞ் சண்முகனும்
அய்யாவு மென்னுள்ளே யாம். (2)

முத்திபெறு மென்னெஞ்சு மூர்க்கருட னேயிணங்கி
சித்தர் ததும்பிச் சிதருமன்—முத்தனும்
பட்டினத்தார் சாட்சிப் பகுத்தறித விந்நூலைத்
தொட்டவர்க்கு முண்டாஞ் சுகம். (3)

பணியறுத்த லாகப் பரபோகங் கொண்டு
துணிவுறுத்த நெஞ்சுக்குச் சொல்லின்—அணியாய்
படபடென்னும் நெஞ்சம் பகரு சிவானந்தத்
திடமுறுவார் தானே சிவம். (4)

சிங்கா தனமுடைய செல்வ வடியார்கள்
தங்காற் சிரமேற் றரித்திட்டேன்—பொன்காள்
ஏற்றிப் புகழ்ந்தன்பா லிந்நூலென் புன்கவியால்
சாற்றத் துணிந்தேன் சரண். (5)

## நூற்பயன்

விருத்தம்

அறிவதனை மனங்கேட்கச் சிவானந்த போதத்தை
யறிய நன்றாய்
நெறியுடைய முத்தர்கள்தன் திருவடியிற் பணியவருள்
நிலைக்கக் காட்டிக்
குறியுடனே யனுபவித்து வழியடைந்து கதிபெறவே
கூற வென்றும்
பிரிவறவே வாழ்ந்துசிவப் பேரானந் தம்பெருகப்
பேசு மிந்நூல். (6)

## ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் துதி

நிறைந்தபரி பூரணமாய் நிற்குணமாய் நிர்மலமாய்
நித்த னாகித்
துறந்தமனத் துடையோர்க்குந் துரியனுமா யதீதனுமாய்ச்
சோதி யாகிக்
கறந்தமுலைப் பாலாகிப் பாலினுள்ள ருசிகாட்டுங்
கர்த்த னாகிச்
சிறந்தகுரு மாணிக்க சுவாமிகளை யெம்முளத்திற்
றொழுதல் செய்வாம். (7)

## சமயாசாரியர் மூவர் துதி

இசைகுருகிப் பரந்தானே யெழுந்தருளி வேண்டியதேச
ரின்பந் தந்து

இசைக்குளவா யெதிர்த்தவரை மதித்திடாச் சிவசமய
மேலாய்ச் செய்து
இசைக்குளமேவோர் புகழ்ந்தேத்தச் சிவாலயத்திற் றேவாரஞ்
சிறக்க வோதிப்
பசைக்கருதி யருள்பெருகு மூவரிணை மலரடியிற்
பணிகின் றேனே. (8)

பஜவண்ணர் அல்லமாப்பிரபு துதி

பத்திநிலை தவறுமற் கிருபையுமே வழுவாமற்
பாரின் மீதே
யுத்திசிவ கணேசருக்குப் போதமுற்றுப் பூஜைசெய்
துகந்து ஞானத்
தத்துவமே யுணர்ந்துசிவந் தாளுகும் பஜவண்ணர்
சாக்ஷாத் கார
முத்திதரு மல்லமாப் பிரபீச ரிருவர்தாள்
முடிகொள் வாமே. (9)

மருத்துமலை தேசிகர் துதி

பன்னுமறை சாத்திரங்க ளாகமங்கள் விரிந்தநூற்
பலத்திற் சென்றே
யுன்னுகின்ற மனத்தாலே பிறப்பிறப்பாம் நோய்பலவற்
றுற்றி டாமற்
பொன்னுடைய வம்பலவற் கழற்பணியச் சிந்தையற்றுப்
பூஜை செய்ய
வென்னதென்றே யெனையாண்ட மருத்துமலைத் தேசிகன்று
ளிறைஞ்சு வோமே. (10)

# நூல்

## [அறிவுக்கும் மனதுக்கும் * வாக்குவாதம்]

### அறிவு கூறல்

ஆன நெஞ்சமே யிமைப்பொழு தாகிலு
மலைவறுத் திருந்தாயோ
போன நாளிலே நடந்தது மிருந்ததும்
புதுமைக ளறியாயோ
ஈன மாகிய கவலையை நீக்கியைம்
பொறியினி லிணங்காமல்
தான மொத்துநான் சொன்மொழி கேட்டுநீ
சரியென்று மகிழ்வாயே. (1)

### மனங் கேட்டல்

"ஏதேது விபரீதமாக இருக்கின்றது; இமைப் பொழுதாகிலும் பிரியாமலிருந்த நீ இப்போதென்னை அன்னியமாகக் குறித்துச் சொற்படிக் கேட்கச் சொன்னது சந்தோஷமாயிற்று; ஆகிலும், உதவியான காரியமாக இருப்பின் கேட்கவேண்டுந் தானே; ஆதலாற் சொல்க!"

### அறிவு கூறல்

முத்திபெறு மழகான நெஞ்சகமே பணிபறுத்தென்
மொழியைக் கேணி
சத்துசித் தானந்த பராபரமே கதியென்றுஞ்
சார்ந்தி டாமன்
முத்தர்களு மோதிவைத்த நூலதனை யாராய்ந்து
முனைந்தி டாமற்
பத்திநிலை நில்லாமற் சிந்தனையு மோயாமற்
பார்ப்பதென்னே. (2)

---

*பாக்கள் - அறிவு சொல்வது; வசனங்கள் - மனது சொல்வது.

## மனங் கேட்டல்

"ஆயின், யாதோ பாத்தைச் சாரவில்லை எனவும், நூலி னுட் பொருளை யறிந்து முனைகொள்ளவில்லை எனவும், பத்தி நிலையில் நிற்கவில்லை எனவும், சிந்தனைகளை அறுக்கவில்லை எனவும் சொல்கின்றனவற்றை எக்காலத்தினும் யான் அறியாதவனாக விருக்கின்றேன். இஃது அந்தரங்க பாவைை யாக இருக்கின்றது. மாடு, மக்கள், பெண்டீர், சுற்றம், வாணாள் முதலியனவே பொருளென் றுன்னியிருந்த என க்கு இப்போது திடீரென்று நான்கு வகையிற் சிந்திக்கச் சொன்னீர். அவற்றை ஸ்பஷ்டமாசப் புலப்படுமாறு புகல்க!"

## அறிவு கூறல்

மாடு மக்களுஞ் சுற்றமும் பெண்டிரு
மாளிகை யுடன்வாழ்வும்
நாடு ராச்சிய மாண்டிடும் புகழ்ச்சியு
நம்மதென் றேதேகத்தி
னூடு சென்றுநீ யெனதுட லியானென
வுழன்றலுத் திடுநெஞ்சே
வீடு விட்டுயி ரேகிடும் போதினில்
வினைவழி நுழைந்தாயே. (3)

## மனங் கேட்டல்

"தேகத்தினுள்ளே புகுந்து மாடு, மக்கள், சுற்றம், பெண்டீர், உயர் வாழ்வு, தேசாதிபத்தியப் புகழ்ச்சி முதலியவை சதமென் றும், தேகம் நான் எனது என்று பாராட்டி உழலுகிறு யென்றும், முடிவுகாலத்தில் வினைவழியிலே உயிரை நுழை க்கிறு யென்றுஞ் சொல்லுகின்றாய். நீ இதுகாறும் கூட இருந்ததில்லையோ? இதுவரையில் நீ யாதும் புகலாதிருந்தவா றென்னை? இப்போது நீ இங்ஙனஞ் சொல்லுதற்குக் காரண மென்னை?"

அறிவு கூறல்

கேணீ நெஞ்சமே யுன்னிட வயத்திலே
கிடந்துலைந் தனமின்னுள்
வீணிலேபல செனனமு மெடுத்ததின்
மெலிந்திடு மப்போது
ஊணிலேயென்னை யானறி யாமலே
யுத்தமர் நோக்கத்தாற்
காணு மிப்படி மானிட தேகமுங்
கண்டது மறிவாயே. (4)

மனங் கேட்டல்.

"அனேக தேகங்களிற் பிறந்து பிறந்திருக்கின்றதாகவுஞ் சொன்னீர்; அவற்றுள் இம் மானிட தேகம் அருமையாகப் பெரியோர் கிருபா நோக்கத்தாற் கிடைத்ததாகவுஞ் சொன்னீர்; அதன் விவரம் எனக்குத் தெரியும்படிக்கு நீர் சொல்லும்!"

அறிவு கூறல்

வேறு

நாலுவகை யோனியிலு மெழுவகையின் தோற்றத்து
நளின மாக
மேலுகந்த மானிடந்தா னெடுப்பதுவே யருமையாய்
மெய்ய னாகி
பாலுபோன் மனமுடைத்தாய்ப் புண்ணியமே மிகுந்துபவங்
கீழாய்த் தள்ளி
நூலுணர்வ தருமைநெஞ்சே யிருவினையி லொருவினையை
நொறுக்கித் தானே. (5)

மனங் கேட்டல்

"ஆனால், மானிடதேக மெடுப்ப தருமையென்று சொன்னீர்; அதிலும் மெய்யனாகிக் கள்ளமற்றுப் பாவம் போக்கிப் புண்ணிய

யிருந்து நூலுணர்வ தருமை யென்றுங் காட்டுகின்றீர்; அப்படியானால், மானிடதேகத்திலேதானே பலவிதமான அருமையாகிய தேக முண்டோ?"

அறிவு கூறல்

மனிதரினும் பறவையுண்டு விலங்குண்டு கல்லுண்டு
மாமு முண்டு
மனிதரினு நீர்வாழுஞ் சாதியுண்டு அநேககுல
மனிக ருண்டு
மனிதரினு மனிதருண்டு வானவரு மனிதராய்
வருவ துண்டு
மனிதரிலே பிறப்பறுக்க வந்ததே யருமையென
வகுத்தார் முன்னோர். (6)

மனங் கேட்டல்

"ஆனால், தேக மெடுப்பது எவ்விதம்? வினை யென்பது ஒன்றோ? இரண்டோ? இதில் சகாயமான வினை யெது? வினைவழியாய்த் தேக மெடுக்கிறது யாராலே?"

அறிவு கூறல்

எழுவகையின் றோற்றமாய்க் கடந்தோறும் பலவிதமா
யின்ப முற்றே
பழுதறவே தேகம்வரும் பேய்மனமே! நீசெய்த
பண்பி னாலே
உழிதருமிக் காலத்து மொழியாம் மிருவினையா
லுகந்து நிற்கும்
கழிதருமிவ் விருவினையி லொருவினையை நோக்குவது
கடினந் தானே. (7)

### மனங் கேட்டல்

"ஆனால், என்னாலே வினையுண்டாகிற தென்றும், வினையினாலே தேக மெடுக்கிறதென்றும் சொன்னீர்; வினைவழியாய்ப் பல யோனிதோறும் எப்படிப் புகுந்து ஜநந மரண மூண்டா கிறது?"

### அறிவு கூறல்

வேறு

மனவாக்குக் காயத்தான் மருவுஞ் செய்கை
மலர்மணம்போ லுறுஜன்ம மயக்கத் தாலே
இனமாக்கும் பிறவியினி விழுத்துக் கொண்டே
யெத்தனையோ ஜன்மத்தி லிறக்கச் செய்யும்
தனவாக்காய் பிரம்மாவுஞ் சிருஷ்டி செய்ய
தான்றானே வளர்ந்திந்தத் தரணி மீதே
இனமாக்கு வெம்பாசந் தன்னிற் சிக்கி
யிறந்தார்கள் பிறந்தார்க ளின்னம் நெஞ்சே. (8)

### மனங் கேட்டல்

"ஆனால், 'பிறந்தாலு மிறந்தாலும் வேதாகம சாஸ்திரங்களிற் கூறிய வாறு நடந்தால், தேவேந்திர பதவி பிரம்மபட்ட முதலான வைகளை அடையலாம்' என்று சொல்லுகின்றார்களே; அது சுகமல்லவோ?"

### அறிவு கூறல்

வேறு

மூந்த ஜன்மமாம் புண்ணிய மிகுந்திடின்
முக்கிய முண்டாகும்
பிந்த ஜன்மமாம் பாவமே மிகுந்திடிற்
பெரியதோர் துயராகும்

அந்த ரெண்டையு மறுத்திடி லொளிதரு
மரன்கழற் றுணையாகும்
பந்த மானதோர் புராணங்கள் வேதங்கள்
படைத்ததை யறிவாயே. (9)

### மனங் கேட்டல்

"ஆனல், மும்மூர்த்திகள் பட்டமாயிருந்தாலும், தேவேந்திரப் புகழ்ச்சி பெற்றாலும், பின்னும் பூலோகத்திலே பிறப்பதுண்டோ?"

### அறிவு கூறல்

வாழு மாலய னுருத்திர னிந்திரன்
வானவ ரானாலும்
சூழு மாயுகம் பிரளயந் தன்னிலுஞ்
சுகமுடன் வாழ்ந்தாலும்
தாழு மானதொல் லுலகில்வந் துறுவர்கள்
தரணியோர் புகழ்ந்தேற்ற
வீழும் நெஞ்சமே யரனடி சேர்ந்திடில்
வினைக்குழு விழுந்தாயே. (10)

### மனங் கேட்டல்

"ஆனல், வேதாகம புராண சாஸ்திரங்களை யுண்டாக்கி வைத்ததார்? அவற்றாலே என்ன பிரயோசனம்?"

### அறிவு கூறல்

நிராஜன் மத்தை யெடுத்தும் பவத்தினில்
நழுகிடா திவ்வண்ணமே
நிரம தாகவே யீசனுத் தரவினாற்
செய்பவர்புண் ணியமென்றே

வரமு டைத்தநல் வியாசருஞ் செய்தனர்
வழங்கிடு மதனுலே
பரவடி யையுறு மூத்தர்க ளிருவினைப்
பற்றறப் பார்த்தாரே. (11)

### மனங் கேட்டல்

"ஆனுல், ஒருவர் செய்கிற பாவ புண்ணியம் ஒருவருக்கு உண் டென்கிறது எவ்விதம்?"

### அறிவு கூறல்

வேறு

ஒருவர்செய்த பாவபுண் ணியமொ ருவர்க்
குண்டென்று சொல்லுகின்ற வூமை நெஞ்சே!
தருகுமவ ரவருயிர்க்குத் துணையார் சொல்வாய்
தந்தைதாய்ப் பெண்டுபிள்ளை திணையு மாமோ
வருகுமந்த வியாதிகளும் வினைதா னல்லோ
மக்கள்பெண்டு தந்தைதாய் வாங்கிக் கொண்டு
திருகுமவர் பின்னொருவர்க் கீந்த துண்டோ
திருஷ்டாந்தங் கண்டுநீ தெளிந்தி டாயே. (12)

### மனங் கேட்டல்

"அப்படியானுல் புராணங்களிலே 'ஒருவர் செய்த பாவ புண்ணியம் மற்றொருவருக்குஉண்டு' என்று பொய்யாகக் கூறவேண்டிய காரணம் யாது?"

### அறிவு கூறல்

பாசபந்த மானதொரு மூடர்க் கிந்தப்
பற்றுதலை வையாட்டால் நம்ப மாட்டார்
ஆசைகொண்டு செய்யார்கள் விகாதஞ் செய்வார்
அதனுலே பொருத்தம்வைத்துச் சொன்ன தல்லால்

நேசமிது போலவே பகைத்தார் பாரு
நீங்கினால் வேறுகதி நிலத்தோர்க் குண்டோ
மோசமிது நம்பாதே நெஞ்சே! கேளு
முனைந்தவர்க்குச் செய்தபலன் முடியுந் தானே. ()

## மனங் கேட்டல்

"ஆனால், ஒருவர்க்கொருவர் நன்மை தீமை இவற்றின் கூட்டுற வில்லையே; அப்படியிருக்க, ஒரு குடும்பத்திலே பத்து ஜனங் களில் தாங்கள் ஒன்றுக்கொன்று பிறவற்றிற் கிடங்கொடாம லும், உள்ளுக்குள்ளே அனேக விகற்பங்களோடு மனம் பேதித்தும் வாழ்கின்றார்களே; எந்தப் பற்றுதலைக்கொண்டு அவர்கள் ஒன்றுபோ லிருக்கின்றார்கள்?"

## அறிவு கூறல்

பெண்ணாலும் பொன்னாலும் பூமி யாலும்
பெருக்கவே யிச்சைகொண் டொன்றுக் கொன்று
தின்னார்க ளுறவாடிச் செத்தா ரல்லாற்
சேர்ந்துமன மொன்றாகிச் சிறந்திட் டாரோ?
கண்ணாலே பார்த்துநீ சுகங்கண் டாயே
கவலைக்கே யாளாகிக் கருத்தி ழந்து
புண்ணாகிப் பிறப்பிறப்பிற் புகுந்திட் டாய்நீ
பூமலர்த்தா ளிணையென்று புகழ்வாய் நெஞ்சே. (14)

## மனங் கேட்டல்

"ஆனால், வினை வழியே உயிர் இத் தேகத்தை விட்டு இனிமேல் தேக மெடுக்கிற தெந்தத் தேகமோ அதைத் தெரிவிக்க வேண்டும்? இத் தேகத்தை விடும்போது யாதேனும் குறிக ளுண்டோ?"

### அறிவு கூறல்

#### வெண்பா

தேகந் தனிற்பொறியுஞ் சீராம் புலன்கரணம்
ஆகந் துறக்கும்போ தந்நேரம்—போகமது
எவ்விடத்துச் சென்றதோ யேற்குங் கடவடிவம்
அவ்விடத்தை நன்றா யறி. (15)

### மனங் கேட்டல்

"ஆனால், யான் வினைப்பயனையு மறிந்தேன்; இந்த அருமையாகிய மானிட தேகம் வந்ததையு மறிந்தேன்; வேதாகம புராண சாத்திரங்களின் கட்டுப்பாடுகளையு மறிந்தேன்; பிறப்பு இறப்பு இவற்றின் விவரமு மறிந்தேன்; வினைவழியே தேக மெடுக்கிற தென்னும் விவரத்தையும், என்னால் வினை யுண்டாகின்ற தென்பதையு மறிந்தேன்; ஒருவர் செய்த நன்மை தீமை மற்றொருவர்க்கு உதவியில்லை யென்பதையு மறிந்தேன்; ஒரு குடும்பத்திலே பல ஜனங்கள் ஒன்றுபோற் கூடி வாழ்கிற பந்தத்தையு மறிந்தேன்; எல்லாவற்றையும் உள்ளபடியே ஒத்துக்கொண்டேன்; ஆனந்த திருவடி நிழலை யடைகிறதே சுகமென் றாசை கொண்டேன்; இத்தனை நாளாக என்னை நம்பியிருந்த குடும்பத்தா ரெல்லோரும் இளந்தைகளாக விருக்கின்றபடியினாலே அவர்களை விட்டு விட்டால் வேறு கதி யின்றி அவர்கள் வருந்துவ ராதலால், அவர்கள் பரிபக்குவ காலபரியந்த மிருந்து காக்கவேண்டு மென்று பரிதாபப்படுகின்றமையால் அதற்கொரு பரிகாரஞ் சொல்க!"

### அறிவு கூறல்

#### விருத்தம்

அவரெல்லா மிருக்கவிப்போ துன்னை யேம
னழைத்துவிடி லியாதுசெய்வா யழகு நெஞ்சே!
இவர்களுக்குப் பிழைக்கும்வகை திரும்பி வந்தே
யேதுவாய் முடிப்பதுண்டோ எண்ணிப் பாரு

தவறிநீ கடம்விட்டுப் போகும் போது
தான்கூட மாண்டாரோ பிழைப்பில் லாமல்
அவரவர்க்குச் சிவன்றுணையென் றெண்ணி டாம
லையத்தா விப்படியே யலைவுற் ருயே. (16)

மனங் கேட்டல்

"ஆனல், அறியலானேன்; இனிமேல் யான் பாச பந்தத்தில் வீழ்வேனே? யான் திருவடியை அடையாம லிருப்பேனே? ஆயினும், இன்னுஞ் சில காலம் பொறுத்துத் திருவடியை யடைவதற்கு ஏது பண்ணிக்கொள்ளக் கூடாதோ? இப்போதே யான் துணிந்துகொள்ளல் வேண்டுமோ?"

அறிவு கூறல்

காயமன வாக்குத்தான் றளர்ந்த போது
கருத்தழிந்தே யுறுதியற்றுப் பாச மீறி
நேயமந்த மாய்கையினிற் பற்றிக் கொண்டால்
நெற்றிக்கண் படைத்தவர்தா னிலைப்பிப் பாரோ
மாயமண மேயிந்தக் காயந் தானும்
வல்லமையோ எத்தனைநாள் வாழு மோசொல்
காயமது நிலையல்ல என்று முன்னேர்
கண்ணொளி மழுங்குமுன்னே கதியுற் ருரே. (17)

மனங் கேட்டல்

"அப்படியானல், மிகவும் அச்சங் கொண்டேன்; இனி, திருவடி யடைதற்குத் தகுந்த வழி யாது சொல்!"

அறிவு கூறல்

வெண்பா

மூந்திபரி பூரணமாய் முத்தி யடைந்தவர்கள்
சிந்தைமகிழ்ந் தோதுஞ் சிவநூலை—யுந்தியுந்திப்

பார்த்தறிநீ நன்றாய்ப் பகுத்துப்பகுத்து நெஞ்சே!
சேர்த்தறிநீ யென்வசத்திற் செல். (18)

மனங் கேட்டல்

"அப்படியே சொல்லுகிற சில நூல்களைப் பார்த்தேன். திருவள்ளுவ நாயனார், முப்பால் வைத்துக் கூறியருளிய தமது திருக்குறளில் "துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு, மில்வாழ்வா னென்பான் றுணை" என்று சொற்றனர். அஃதென் கொல்?"

அறிவு கூறல்

விருத்தம்

யாவ ரிருக்கு நிலையதனை
யவர்க்கே யதனி னிலையமர
மூவர் முதலாம் ரிஷியோர்க்கு
முழுகத் துறந்தோர் காமியர்க்குந்
தேவ ரீர்க்குந் திறமுதலாய்ச்
சிறக்கக் காட்டுங் கண்ணொளிபோல்
நாவி லிருந்தே அஞ்சனமாய்
நவின்ற மொழியென் னுயகமே. (19)

மனங் கேட்டல்

"ஆனால், முத்திநிலையை மாத்திரம் தனிமையிற் பேசுகின்ற நூல்கள் இவற்றை எவ்விதமாகச் சொல்லும்?"

அறிவு கூறல்

வெண்பா

தேக மெடுத்ததுவுஞ் சிந்தை யுடைத்ததுவும்
போகசமு சாரத்திற் புக்கதுவும்—தாகமது
கொண்டு தவிர்த்ததுவுங் கூறுங் கனவென்னவே
கண்டுசொல்லும் நூலதனைக் காண். (20)

மனங் கேட்டல்

"ஆனால், அந்த நான்கையும் பார்வையிட்டேன்; அவற்றிலுள்ள பொருள்களைச் சங்கையற இவ்வா றிருக்குமென்று தெரிந்து கொண்டாற் போதுமோ?"

அறிவு கூறல்

விருத்தம்

அறிவுக்கே சாட்சிகொண்டு நூலைப் பேசி
அங்கத்தைத் தானழித்து அகத்தை நோக்கு
குறிவைத்த படியிருந்து மெய்யைப் பொய்யாய்க்
குற்றமென்றே பொய்யைத்தான் பொய்யாய்க் கண்டு
நெறியுற்றே யிருவினையும் நீக்கிப் போட்டு
நேசமுட னீசனுடன் பாசம் வைத்துப்
பிறிவற்று ஒன்றாகி வாழ லாகும்
பேதித்துப் போகாதே பேணிக் கூடே. (21)

மனங் கேட்டல்

"அந்தப்படி தானே யனுபவிக்கிறதா? மற்றொருவருடைய சகாயமும் வேண்டி யிருக்குமோ?"

அறிவு கூறல்

வேறு

புகர்ச்சமய மாகின்ற பலசமயக் தன்னிலே
புகுந்தி டாமல்
அகச்சமய மாகின்ற சிவசமயத் திச்சைக்கே
யகப்பட் டானீ
மிகப்பெரிதாம் புத்தியைநீ படைத்திருந்தும் பெரியோரை
மேவி டாமல்
தகைப்பட்வே பிறவியென்ற நோய்க்குள்ளே சிக்கித்தான்
றளர்வ தேனோ. (22)

### மனங் கேட்டல்

"ஆனால், பெரியோர்களைச் சாரவும் வேண்டுமோ?"

### அறிவு கூறல்

பெரியோரைச் சாராம லவர்களுக்கே யன்புசெய்து
பேசி டாமல்
துரியமா தீதத்தில் சிவபூஜை செய்யாமல்
சுற்றிச் சுற்றி
அரியயனுங் காணாத பரமசிவ மென்றதையு
மறிந்தி டாமல்
சரியென்று வினைப்பயனுங் கொண்டதுவே கோலமாய்ச்
சாதித் தாயே. (23)

### மனங் கேட்டல்

"ஆனால் தெளிந்த பெரியோர்களுக்கு ஜகத்திலே பிரயோஜன மில்லையே; அவர்கள் எவ்விடத்தி லிருப்பார்களோ! அவர்களைக் கண்டு தரிசிக்கலாகுமோ?"

### அறிவு கூறல்

வேறு

தெளிந்த துறவி யிகந்தனிலே
தேகப் பிராரத் துவப்படிக்கு
பொழிந்தே கரணத் தனுபோகப்
புவனத் திருந்து மெச்செயலும்
ஒழிந்து சிந்தை தெளிவுற்றே
ஒன்றே சிவமென் றிருப்பார்க
ளிழிந்தபேரு மவரைக் கொண்
டேறு வார்க ளிகத்தோரே. (24)

### மனங் கேட்டல்

"ஆனால், இகத்தில் சஞ்சரிக்கிறதினால் பெரியோர்களுக்கு இடறு வாராதோ?

### அறிவு கூறல்

கருவி யகன்றிவ் வுலகத்தைக்
கனவென் றிருக்கக் கருத்ததனுள்
உருவைக் கண்டொப் புவமையற்று
உள்ளும் புறமு மொன்றாகிக்
குருவைப் பணிந்து பூரணத்தில்
குலாவு மடியார் ஜகந்தனிலே
மருவப் பொருந்தி வாழ்ந்தாலும்
மாசற் றிருப்பார் வல்லவரே. (25)

### மனங் கேட்டல்

"ஆனால், விபரீத மிகுந்து வந்ததானால் அதை நீக்கிக்கொள்ள வல்லமை யுண்டோ?"

### அறிவு கூறல்

மூந்த விருந்த வஞ்ஞான
மூட மான சத்தியையும்
பந்த மறவே துணிந்துபரா
பரனைத் தினமுங் கைக்கொண்டு
சிந்தை தெளிந்தே குருபரனைச்
சிவமென் றெண்ணுந் துணிவதனால்
தொந்த மறுத்துச் சிவானந்தச்
சோதி யதுவாய்ச் சுகிப்பாரே. (26)

### மனங் கேட்டல்

"அப்பேர்ப்பட்ட பெரியோர்கள் எந்த ஜாதியாயிருந்தாலும் தொண்டு பட லாகுமோ?"

### அறிவு கூறல்

சாதி பேதந் தனைக்குறித்துத்
    தயங்கி மயங்கித் தளராதே
சாதி யாவ தெவரறிவர்
    சருவ வுடலு மொன்றுச்சே
சாதி யாவ ரெவரென்னில்
    தன்னை யறிந்து சிவமான
சாதி பெரிய சாதியென்று
    சாற்று மறைகள் சத்தியமே. (27)

### மனங் கேட்டல்

"ஆனல், பெரியோர்களை ஜாதி பிரித்துச் சொல்லுகிறதினுலே குற்ற முண்டோ?"

### அறிவு கூறல்

ஞானம் பதியா விழிகுலத்தோர்
    நாட்டிற் பிரித்தே சாதிதன்னை
யீன சாதி யாரென்றே
    யிகழ்ந்தார் முத்தர் பத்தரையும்
ஆன பெரியோர் தங்களையு
    மவரி லொன்றாய்க் குறித்துக்கொண்
டின முரைத்தே யருநரகி
    விழிந்து போனு ரிகத்தோரே. (28)

### மனங் கேட்டல்

'இப்பேர்ப்பட்ட பெரியோர்கள் ஜகத்தோ ரிகழத்தக்கதாகத் திரிவானேன்? ஜகத்தோர் இவர்களை யிகழுவானேன்? இதனுல் யாருக்குத் துன்பம்? யாருக்கு இன்பம்?"

அறிவு கூறல்

[வேறு]

பெரியோரைப் பித்தரென வுலகத் தோர்கள்
பேயரென்ன விகழ்வதென்ன பிரித்துக் கேளு
இரிவார்க ளிச்சைபடி ஜகத்தோர் பார்த்து
தீவினையும் நல்வினையும் திரட்டிக் கொள்வார்
சரியாச்சென் றிருவினையு மொழித்துப் போட்டு
சச்சிதா னந்தமென்ற பதத்திற் சார்ந்து
துரியாதீ தப்பொருளைப் பெற்று மந்தச்
சுயஞ்சோதி யாகியே சுகமுற் றாரே. (29)

மனங் கேட்டல்

"ஆனால், பெரியோர்க ளிருவினையையும் ஜகத்தோருக்கு ஒப்புவித்துச் சுகம் பெற்றார்களே? அவர்களை இகழ்ந்த வுலகத்தாரென்ன லாபம் பெற்றார்கள்?"

அறிவு கூறல்

பெரியோரை யிகழ்ந்தவர்கள் பெற்ற லாபம்
பேசக்கேள் நெஞ்சகமே பெருமை யாகப்
பரியேறிப் போனவன்றான் றீயில் வீழ்ந்து
பதைத்ததுபோ லடிவயிற்றில் நெருப்பைக் கூட்டி
நரிவாயில் பொருள்பறிக்கு மின்பம் போலே
நகைத்திகழ்ந்தே எரிவாயி னரகம் புக்கு
விரிவான வெழுநரகில் விழுந்தி ளைத்து
மெலிந்திடுவா ரென்றுமறை விசுந் தானே. (30)

மனங் கேட்டல்

"பெரியோர்கள் மஹத்துவ மிப்படிப்பட்டதென்று அறியலானேன்; அப்படிப்பட்ட மஹாத்மாக்களின் தரிசனங் கண்டுகொள்ளுகிறதற்கு மார்க்க முண்டோ?"

அறிவு கூறல்

[வேறு]

குற்ற மேதுங் குறியாமல் குணமும் பலவாய் விரியாமல்
ஒத்து பொறிகள் புலனைந்து முறவர்ய் நீயு முகந்திதனை
பத்தும் பதன மாகத்தான் பட்ச மிகவும் வைத்துரைத்தாற்
சித்த மதனைச் சிவமாக்கு சிவானந்த போதமிதே. (31)

மனங் கேட்டல்

"ஆனால், எவர்களிடத்திலும் சாஸ்திரத்தின் கேள்வி கேட்டுத் தெரியும்படிச் செய்துகொள்ளுகிறதுதானே? அவர்கள் ஆக்கினைக்கு உட்பட்டுத் தொண்டுபண்ண வேண்டுமோ?"

அறிவு கூறல்

[வேறு]

ஐயமின்றி யுடல்பொருளு மாவி மூன்று
மாண்டவனே யுன்னதென் றளித்துப் பின்னுந்
துய்யகுரு நாதனுக்கே யடிமை யாகிச்
சொன்னபடி கேட்பதற்கே தொண்ட னாகி
மெய்யனென்றே யவர்மனமுங் களிக்கு மட்டும்
வேண்டினதோர் சோதனைக்கு மிதத்தி டாமல்
செய்யதிரு மலரடியிற் காத்தி ருந்தாற்
செவியதனி லுபதேசம் செய்வார் தாமே. (32)

மனங் கேட்டல்

"ஆனால், வெகு பிரயாசையா யிருக்கும்போ லிருக்கிறதே! சாத்திரங் கேள்வி மாத்திரங் கேட்டுக்கொண்டு புத்தியினாலே அனுபவித்து முத்தி யடையக்கூடாதோ? குருசமுகத்தில் தொண்டு பட்டுத்தான் முத்தியடைய வேண்டுமோ?"

அறிவு கூறல்

[வேறு]

இருவினையுஞ் சமமுடைத்தே யெழுந்து வந்த
வெண்குருவா மாணிக்க வீச னார்க்கும்
குருவடிவா யம்பலவ ருபதேசித்த
குறிப்பைத்தா னறியாயோ குருட்டு நெஞ்சே!
மருவுமிந்த வுடலுக்கு ளுடலைக் காட்டி
வாக்குக்கு வாக்கருளி மனமு மொத்துத்
திருவடியி லடையகுரு முகூர்த்த மல்லாற்
சிவானந்த போதகமுந் தெளிந்தி டாதே. (33)

மனங் கேட்டல்

"அப்படியானால், ஞானசாரிய ரிடத்தில் அனுக்கிரகம் பெற்றுக் கொண்டால் போதாதோ? சாத்திரமும் பார்க்கவேண்டுமோ?"

அறிவு கூறல்

[வேறு]

சேறுபோல் தளதளென வலைபூ மிக்குள்
திடமான கம்பத்தை நாட்டி னக்கால்
மாறுகொண்டு விழுந்திடுமென் றதனைச் சுற்றி
மணற்கல்லைக் கெட்டித்து முறைக்கு மாபோல்
கூறுகின்ற சாத்திரத்தின் சாட்சி தந்து
குலைந்திடாத் திடமுற்றுக் குறித்து நின்று
வீறுகொண்டு நெஞ்சேநீ யனுப வித்தால்
மெய்ஞ்ஞான வீடதனில் விளங்கு வாயே. (34)

### மனங் கேட்டல்

"ஆனால், சாத்திரந் தெரியாமல் சற்குருவினிட முபதேசம் பெற்றுச் சாதித்து அடைந்த அனுபவம் காட்சி நூலிலுள்ள பொருளுக்கு ஒத்துக்கொள்ளுமோ?"

### அறிவு கூறல்

உறுதிகொண்ட பிள்ளையென்று லாசான் வைத்த
வுபதேசங் கேட்டளவி லுறுதி கொண்டே
இருதயத்தில் நாட்டினது நழுவி டாம
லெப்போதும் குருபத்தி தவறி டாமல்
மறுகவலை சாராம லூன்றப் பெற்றால்
வழங்குநூல் பேசுகின்ற வண்மைக் கொக்கும்
கிருபைதரும் முத்தியே யடையலாகும்
கிட்டினவர்க் கேதுகுறை கேடில் நெஞ்சே! (35)

### மனங் கேட்டல்

"ஆனால், ஞானானுபோகம் ஒருவர் பெற்றிருந்தால், பெருந்தவர்கள் 'அந்த அனுபோகத்தைச் சொல்' என்றும், 'காட்டு' என்றும் சொன்னால், அவர்களுக்கு ஒத்துக்கொள்ளும்படி சொல்லலாமோ? அப்படி இப்படி யென்றுங் காட்டலாமோ? ஆகிலும், மெய்ப்பொருளினுடைய பிரகாசத்தைப் பேசினால் மனமொத்துக் களிப்பார்களோ?"

### அறிவு கூறல்

ஒருவர்தின மொருவர் சொரிந் துற்ற போது
உற்றவர்க்கோ சொரிந்தவர்க்கோ உற்றுப் பாரு
மருவுமந்த சொப்பனத்திற் கண்ட காட்சி
மகிழ்ந்தவர்க்கோ கேட்டவர்க்கோ மதித்துப் பாரு

உருசியுட னறுசுவைகொண் டுண்ட வர்க்கோ
உவகையுடன் கண்டவர்க்கோ வூன்றிப் பாரு
தெரிசனமுங் கண்கண்டு சிந்தை யற்ற
சிவஞான மவரவர்க்கே தெளியுந் தானே. (36)

மனங் கேட்டல்

"ஆனல், மெய்ப்பொருளினுடைய பிரகாசம் அவரவர்கள் கண்டு களிக்கப்பட்டதுதானே?"

அறிவு கூறல்

நீதானே யறிந்கல்லோ நிலைக்க வேண்டும்
நீட்டேர் சொல்லுகின்ற நெறியிற் சென்றாற்
போதாது போதாது பொங்துக் குள்ளே
புலியிருக்கு மென்றதென்னப் புகுந்து பார்த்தால்
வேதாள மென்றதொரு மயக்கந் தீரும்
மெய்யடியார் மனங்களிக்க மேவி வாழ்வாய்
வாதாடி முத்தர்களை விட்டி டாதே
மனமேநீ யுள்ளபடி வணங்கு வாயே. (37)

மனங் கேட்டல்

"தனித்தனியே சுகமடைவதாயிருக்க, பெரியோர்க ளொருவர்க் கொருவர் கூடிக்கொண்டு ஆனந்தமிருந்து உறவாடுகின்றார்களே! அஃதெவ்வித காரணம்பற்றி?"

அறிவு கூறல்

மறப்பான மூன்றுடனு மிழந்த முத்தர்
மனவெளியாம் பெருவெளியில் மருவ லாலே
துறப்பான வாகாச மொன்றுந் தன்னிற்
சூரியன்றன் பிரகாசத் தோற்றம் போல

சிறப்பாகத் தேகத்தி லிருந்த முத்தர்
திருஷ்டியினுற் கலந்தொன்றுய்த் தியானிப் பார்கள்
மறைப்பான தில்லைநெஞ்சே! கண்மணிக்குள்
வன்னியொளி மருவுமந்த வண்மை பாரே. (38)

மனங் கேட்டல்

"சாத்திரங்களிலே சரியை, கிரியை, யோகம், ஞானமென்று நான்கு பாதங்கள் கூறப்பட் டிருக்கின்றனவே; அவற்றுள் முன் சொல்லிய முத்தொழிலுஞ் செய்து முடிந்த பின்னான்றே ஞானபாகத்தை அறிந்துகொள்ள வேண்டியது. அப்போ தன்றே ஞானுசாரியர் கிருபா கடாக்ஷம் வேண்டியது?"

அறிவு கூறல்

சரியைமுதன் முத்தொழிலுஞ் செய்கின் றோர்கள்
சாயுச்சிய முத்திரையைப் பணிய வேண்டும்
உருசியுட னமுதளித்துப் பாத பூசை
யுண்மையுட னுபசாரஞ் செய்ய வேண்டும்
பரிசைகொண்டு சோதித்து நிந்தை சொல்லி
பகைத்துவிடி னகைத்திடுவார் பலனே பாழாம்
விரிவுகொண்டு மயங்காதே யுற்றுப் பாரு
வீணருடன் கேள்விவிட்டு மெய்யைப் பாரே. ()

மனங் கேட்டல்

"அவ்வளவு மகத்துவ மிருக்கிறபடியினுலே அம் முத்தொழிலினது லாபமுஞ் சுலபமாக இவராலே முடித்துக்கொள்ள லாகாதோ?"

### அறிவு கூறல்

சாயுச்சிய முத்திரையை யடுத்துக் காத்துச்
சங்கையற்றுத் திருவுளத்துப் பாங்குக் கொத்தால்
நீயுச்சிய மாகவென்று கிருபை நோக்கில்
நேரான முத்தொழிலி னிலாப நேர்ந்து
மாயுச்சிய மாகவே யம்ப லத்தான்
மலரடிக்கே யன்பாகச் செல்வாய் நெஞ்சே!
பாயுச்சிய மாகவே பெற்றோ ருண்டு
பராபரத்தை யடைந்ததின் பண்பிஃ தாமே. (40)

### மனங் கேட்டல்

"இத்தகைய அநுபவத்தை இல்லறத்தினின்று பெற்றாளரெவரேனு முண்டுகொல்லோ? அன்றேல், துறவறம் பூண்டு, சந்நியாசியாய்ப் பற்பல விரத வைராக்கியமும் சர்வசங்க நிவிர்த்தியுஞ் செய்து, ஜகசஞ்சாரத்தை விட்டகன்று, ஆரணிய சஞ்சார முற்று வருபவர்களின் ஞானமென்னு மறிவு பிரகாசமாகி ஸ்பஷ்டப்பட்டுளரோ? இவர்களிலுந் தம் மனதுட் குடிகொண்ட அஞ்ஞானந்தகாரத்தை யோட்டும் வன்மை யிலராகி மூடராதலு முண்டோ?"

### அறிவு கூறல்

சன்னியாசி யானதிலு மூட ருண்டு
சமுசாரஞ் செய்வதிலு ஞானி யுண்டு
முன்னாலே யேதுவாம் பிராரத் துவங்கள்
மூட்டிவிட்டு ஞானிக்கு முறைதப் பாது
பின்னாலே யிருவினையுந் தொடரச் செய்து
பெற்றிடுவா ராசானற்றன் கிருபை கொண்டு
பின்னுபின் னவைகளா லென்றெண் ணாதே
பெருஞ்சோதி முத்திரையைப் பேணிக் கூடே.

18853.
சென்னை-600 008

### மனங் கேட்டல்

"இல்லறத்திலே யிருந்தும் ஞானம் பெற்றுக்கொள்ளலா மென்கிறது சுலபமாக விருக்கிறதே! உலகத்திலுள்ள பலரும் ஞானாசிரியரிடத் தனுக்கிரகம் பெற்றுக்கொண்டு முத்தியை யடைவ தருமையா யிருக்கிறதே! அதிலென்ன பிரயாசை?"

### அறிவு கூறல்

யாவர்களும் பெரியோரை யடுத்துக் காத்து
அவரடிக்கே பணிந்துமிக அன்பு செய்து
ஆவலுடன் பன்னிரண்டு வருடங் காத்து
மப்போது பக்குவத்தை யறச்சோ தித்துத்
தேவர்முதன் மூவர்களுந் தேடிக் காணாத்
திருவடியு முடிநடுவுந் தெரிசிக் கத்தா
னுவதனை லுபதேசஞ் செய்வார் நெஞ்சே!
நல்லறிவால் வெகுபூசை நவின்ற தாமே. (42)

### மனங் கேட்டல்

"ஆனால், புண்ணிய மிகுந்து, சிவாசாரபக்தி, நேயம், சிவார்ச்சனை இவற்றை வெகுகாலஞ் செய்து பின்னே நல்லறிவு பிரகாசித்திருக்கும் பேர்களுக்குப் பெரியோர்கள் தரிசனங் கிட்டும்: அப்பேர்ப்பட்டவன் ஆசான் திருவுளத்துப் பாங்குக் கொத்து நடந்து பரகதி யடைவானென்று சொன்னது மறியலானேன்; ஆயினும், பெரியோர்களை யடுத்து, அவர் திருவுளத்துக்குப் பாங்குபோல் நடந்து, தீக்ஷையும் பெற்றுக்கொண்டு, சாத்திரத்திலுள்ள பூட்டை அனுபோகத்துக்கும் ஒப்பும்படி தெரியவுங் கேள்விப்பட்டுக்கொண்டு, ஆசாரியரைக் கவனியாமல், மதங் கொண்டு, ஆசாரியர் திருவடி சூட்ட மகிழ்ச்சி யில்லாமலும், பூரண தீக்ஷை யாகாமலும், தட்டிப்போகிற துண்டோ?"

அறிவு கூறல்

அடியருக்குத் தொண்டாவ தருமை நெஞ்சே!
அவரவர்க்கு விட்டகுறை யடுத்த காலம்
பிடியாம லிருப்பரோ தொட்டுக் கொள்வார்
பேதைமைக ளாலுலகம் பிணக்கு வந்து
குடியாகு மதனாலே நழுகிப் போவார்
குற்றமறச் சற்குருவைக் குறிக்கச் சொல்லும்
விடியாத காலத்தி லிருளே யாகும்
விடிந்தபின்பு கண்ணுக்கு வெளிச்ச மாமே. (43)

மனங் கேட்டல்

"நீர், உலக விபரீதம் வருகிறதாகவும், அதனாலே ஆசானை விட்டு நழுவும்போது ஆசானைக் குற்றமாகக் குறித்துக்கொண்டு போகிறதாகவுஞ் சொன்னீர்; இவற்றை அறியலானேன்; ஆயினும், இவ்வளவிலே நழுவினாலும் இன்னொரு தேகம் புண்ணிய மிகுந்த மானிடமா யெடுத்துச் சடுதியிலே விட்ட குறை முடியும்படி ஞானாசாரியர் கிருபை யடைந்து முத்தி யடைவார்களோ?"

அறிவு கூறல்

இவ்வளவுந் தொட்டேகும் போது மீண்டும்
இகபோக விபரீதம் வந்தா லுந்தான்
அவ்வளவுந் தான்குருவின் றிருவு ளத்துக்
கன்புதவ றுமலே யகன்று ளுகிற்
றெவ்வளவாய் விட்டகுறை தாக்குஞ் சேர்க்குந்
தேசிகனைக் குற்றமெனிற் றெளிந்து மேலாம்
நவ்வளவா யிழிந்துவிடும் பின்னு மந்த
ஞானகுருத் துரோகமுற்று நரகஞ் சேர்வார். ()

### மனங் கேட்டல்

"ஆனால், ஞானாசாரிய ரிடத்தில் ஒத்தாப்போ லிருந்து தெரிந்து கொண்டு, ஞான குருத்துரோகி தானேதான் தெளிந்தவன் போல் பேசுகின்றானே; உலகத்தவர்களுஞ் சிறிது பேர்கள் அதைக் கேட்டு மயங்கி ஒத்து வணங்குகின்றார்களே; அவர்களுக்கும் இவர்களுக்கும் என்ன லாபம் கிடைக்கும்?"

### அறிவு கூறல்

புலித்தோலை பசுவுரித்துப் போர்த்துக் கொண்டு
புலியென்றாற் புலியாமோ இன்னுங் கேளு
பலிப்பாகப் பெண்போலே புருடன் வேடம்
பகட்டினா லவனுருவம் பாவை யாமோ
சலிப்பான நரகத்தில் வீழு மாண்பர்
சற்குருவின் றன்னிடத்திற் கற்றுக் கொண்டு
நலிப்பாகப் புலிபாயு மியல்பு போலே
நானிலத்தோர் வணங்கினதா லீன மாச்சே. (45)

### மனங் கேட்டல்

"ஆனால், அவன், குருத்துரோகி யானபடியினாலே எவ்வளவு தெளிவாய்ப் பேசினாலும் முத்திவிலக்க னென்பது சரியே. அவன் நிச்சயவான் என்று நேசிக்கிறவர்கட்கு என்ன லாபம்?"

### அறிவு கூறல்

மரப்பசுவின் முலையதனிற் பாலுண் டாமோ
மலடிக்குச் சுதனுடைய மகிழ்ச்சி யுண்டோ
தராத்தறியாத் தண்ணீர்ப்பாம் பதன் றலையிற்
றுலங்குமணி யிரத்தினமுந் தோன்றுமோ சொல்

பாத்திவிட நிலையதனைக் குருமுன் பாகப்
பதியாத மூடனையே பணிந்த தாலே
வியர்த்தமே யல்லாம லுதவி செய்ய
விஞ்ஞான முண்டாமோ விளங்கு நெஞ்சே. (46)

மனங் கேட்டல்

"விவரம் அறியலானேன். ஸ்திரீகட்கு ஞானம் வாராதென்றும், புருடர்க்கு மாத்திரம் ஞான முண்டென்றும் கூறுவது எதனாலே? அவற்றை விளங்குமாறு சொல்க?"

அறிவு கூறல்

அஞ்சுகின்ற பெண்ணென்று மாணென் றுந்தான்
அஞ்சுபஞ்ச பூதத்திற் பிரிந்த துண்டோ
நெஞ்சிலுள்ள வஞ்சகங்கள் வேறு முண்டோ
நிறம்வேறோ குணம்வேறோ நேசம் வேறோ
மிஞ்சுகின்ற வுயிர்தானும் பெண்ணென் றுண்டோ
மெய்கண்ட நூலதிலே பிரித்த துண்டோ
சஞ்சலத்தாற் சொற்கேட்டு மயங்கி டாதே
சங்கையற முன்னூலைச் சார்ந்து பாரே. (47)

மனங் கேட்டல்

"ஆனல், "பேதமையென்பது மாதர்க்கு அணிகலம்" என்று ஔவையார் கூறிய தென்கொல்?"

அறிவு கூறல்

ஆணுக்கும் பெண்ணுக்கு மறிவொன் றேயாம்
ஆனாலும் பேதைகுணம் பெண்ணுக் குண்டு
வீணுக்கே யெடுத்தசென்ம மனந்தங் கோடி
விவேகமுத்தி யடைந்தவர்க ளதிலு முண்டே

ஊணுக்குத் தேடியுண்டே யுறங்கிச் செத்த
வுலுத்தருண்டு புருஷரிலே யனந்தங்கோடி
தாணுவினுக் கேகசரா சரந்தா நெஞ்சே
சற்குருவுக் கப்படியே சார்ந்து பாரே. (48)

### மனங் கேட்டல்

"ஆனால், அதுவு மறியலானேன். நான் கேட்கும் சங்கைகளுக்குச் சரியான சமாதானங் கொடுத்து அருமையாய்த் தெளிவுடனே யார் சொல்லப்போகின்றார்கள்! இனிமேல் நடக்கவேண்டிய தென்ன?"

### அறிவு கூறல்

இன்னமின்னம் பிறவிதனிற் பிறந்த னன்றோ
இனிமேலும் பிறவாம லிருக்கை நன்றோ
உன்னுகின்ற நினைவேது கருத்தங் கேதோ
ஓதுகின்ற வாக்கேது செவிதா னேது
பண்ணுகின்ற கலையேது பண்தா னெங்கே
பாடுகின்ற சத்தந்தான் தொனித்த தெங்கே
முன்னிலையாய் ஞானகுரு மொழிந்த தேது
முத்திநெறி யாய்மனதே முனைந்து பாரே. (49)

### மனங் கேட்டல்

"எவ்விதத்திலேயும் பார்க்குமளவில், இந்தக் குடும்பச் சேற்றில் உழைத்துக்கொள்ளுகிறதும், அதற்கு ஒத்தாசையாக உலகத்தார் சொல்லை விசுவாசமாய் ஒத்துக்கொள்ளுகிறதும் துக்கமே யொழிய உள்ளபடி குடும்பத்தார் என்மேல் பிரியமா யிருக்கிறதே யில்லை. எப்படியெனில், நான் சில நாள் சம்பாதனை யில்லாமலும், தேகசௌக்ய மில்லாமலும், ரோகஸ்தனாக இருக்கும்பொழுது பலரும் என்மேல் மனது சலிப்புற்றிருந்ததைக் கண்டேன்; ஏவற் பணிவிடையில்

வெறுப்புற்றதுங் கண்டேன்; சாலவும் பிரக்ஞைதப்பி யிருக்கும்போது பெண்டு பிள்ளைகளை எதிர் வீட்டார் ஆஸ்தியைக் கேட்கச் சொன்னதுங் கண்டேன்; அவரவர்கள் அழும்போது ஒப்பனை சொல்லி அழுகின்ற விதமுங் கண்டேன்; எல்லோரும் பொருளை யிச்சித்திருப்பதை யறியலானேன்; எனக்கு உரிமையான பேர் ஒருவரையுங் காணேன்; அல்லது, மக்கள் முதலானோர் சம்பாதிக்கச் சாமர்த்தியம் வருந்தனிலும் சிலகாலம் உழைத்திருந்து அதன் பின் சும்மா யிருப்போ மென்றாலும் சாத்தியப் படவில்லை; அதுவு மறியலானேன்; ஆகையால், சத்துருவாகிய இந்தப் பேய்க் கூட்டங்களை விட்டுக் காயந் தளரா முன் சிவன் றிருவடி யடைதற்கு நீ சொன்னபடி சத்தியமாய் நடப்பேன்?''

அறிவு கூறல்

[வேறு]

பொன்னி னெஞ்சமே சொற்படி கேட்கவும்
பொருந்தியே நன்றாக
இன்ன மின்னமும் பேதைமை கொள்வையோ
வில்லறந் தனைவிட்டுத்
தன்னைத் தானறி யாமலுஞ் சிவனடி
சார்வது மிழந்தக்கால்
பின்னம பின்னமா யிரண்டுங்கெட் டாளென்றே
பேதைமை கொள்வாயோ. (50)

மனங் கேட்டல்

"இதனால் நான் தெளிந்தவிதத்திலே பேதைமை யென்பது இருக்குமிடமுங் காணேன்; சர்வபணியு மறுத்துவிட்டேன்; ஆனால், தெளிவாய்க் கேட்பதற்குத் தெரியும்படிச் செய்யு முதவி வேண்டும்?''

### அறிவு கூறல்

சுத்த நெஞ்சமே சற்குரு மலரடி தொழுவகை கேட்பாயேல்
பத்த னாகியே மானபி மானமும் பற்றற விட்டேநீ
குற்ற மேதுமற் றெவ்விடங் காண்கினுங் கூறுடற் களிப்புற்று
பற்று மாகியே திருவடி கதியெனப் பண்புடன் பணிவாயே.

### மனங் கேட்டல்

"ஆனால், மானாபிமானம் விட்டு, குருவை எவ்விடங் காண்கினுமன்றே வாக்குக் காயம் ஒத்து அன்பு களிகூர்ந்து, எண்சாண் தேகத்தை இருகையாக்கி, நன்மலர்களை அவர் திருவடிக்குச் சாத்தித் தீர்க்கதண்டம் பண்ணச் சொன்னீர்; அதற்குச் சந்தேகமில்லை. இவ்வளவும் இழந்தபின் நான் இதற்கு அஞ்சுவேனோ? அப்படியே செய்வேன். ஆனால், அதிகமாக உலகத்தார் இகழத்தக்கதாக குரு மிகுந்த அசங்கித ரூபமாக விருந்தால் நான் பணியுமளவிலே நிந்திப்பார்களே! அல்லது, அவ்வாறிருக்கினும் அப்படித்தான் செய்தல் முறைமையோ?"

### அறிவு கூறல்

[வேறு]

குவலயத்தோர் சொல்கின்ற கேள்வி யாலே
கூசுகின்ற நெஞ்சகமே கூறக் கேளு
அவலமாங் கடலுக்கு ளாழு மாண்பர்
அபிமானம் வந்துன்னை அண்டிற் றானல்
சவலையாய் நழுகிடுவாய் முத்தி மார்க்கந்
தான்கிடைப்ப தருமையதைச் சார்ந்தே நீதான்
சிவனடியை யடைவதற்குச் சற்குரு தன்
திருவுளத்துக் கொத்தவழி செல்லு வாயே. (52)

"ஆனல், சற்குருவின் திருவடியில் சரணஞ் செய்வதற்கு மார்க்க மூண்டோ?"

அறிவு கூறல்

ஓம்நமசி வாயவென்ற அக்ஷ ரத்தை
உச்சிக்கண் புருவம்வாய் மூக்கு நாசீ
தாமசங்க ளில்லாமல் முக்கா லுந் தான்
சற்குருவின் றிருவடியில் தான மூத்தி
நேமமா யிப்படியுஞ் செய்வ தூந்தான்
நேரான சரணத்தின் தீக்ஷை யாகும்
ஆம்பின்னே யென்றெண்ணி யிருந்தி டாதே
ஐயனுள்ளங் களித்திடவே யாசை வைப்பாய். (53)

மனங் கேட்டல்

"ஆனல், சரணதீக்ஷையு மறிந்தேன்; செய்யவுந் துணிந்தேன்; கருத்தில் செய்யும்படி குறித்தால் போதாதோ? காயத்தினலு மிகுதியாய் வணங்கிக் கொள்ளவேண்டுமோ?"

அறிவு கூறல்

காயமன வாக்கினு லடைந்த கன்மங்
காயமன வாக்கினுற் கடக்க வேண்டும்
காயமன வாக்கினு லொன்றொ ளித்தால்
கடமெடுக்க வேதுவாங் கண்டு பாரு
நேயமுள வைம்புலனுற் சூழ்ந்த துன்பம்
நீக்குதற்கு முறையிதுதா னிலைத்துப் பார்நீ
மாயவித்தை யாமென்று நழுகி டாதே
வஞ்சகத்தை நீவிட்டு வணங்கு வாயே. (54)

மனங் கேட்டல்

"ஆனால், அப்படியே செய்கிறேன்; இன்னஞ் சற்குருவின் திரு வுளத்துக்குப் பாங்காய் நடக்கு மார்க்கங்கள் சொல்க!"

அறிவு கூறல்

வஞ்சனைபொய் சூதுகப டங்க ணீக்கி
மானவபி மானமுதற் பெருமை நீக்கி
அஞ்சுகின்ற கோபமாங் கார நீக்கி
ஆசைபதைப் பாதியடி யோடே நீக்கி
துஞ்சலே சோதித்துப் பார்த்தா லுன்றன்
துணிவாகித் திருவடியே கெதியென் றெண்ணித்
தஞ்சமென்றே யையனது நிழல்போற் காத்துச்
சரணத்தி னேவல்செய்து தழைத்தி டாயே. (55)

மனங் கேட்டல்

"அப்படியே தொண்டு செய்கிறதற்கும் ஆளானேன்; எத்தொழிலு மில்லாமல் சர்வ ஆசையு மிழந்து நிரந்தரமா யிருக்கிற பெரி யோர்களிடத்தில் தொண்டுபட் டிருந்தால், வயிற்றுப் பசிக்கு அன்னம் வேண்டியிருக்குமே; அதற்கென்ன வயணம்?"

அறிவு கூறல்

[வேறு]

இச்சையுட னெத்தனைநா ளிவ்வுலகில் வாழ்ந்தாலு
மிடரே சொல்வர்
நச்சைவரு மிதனாலே தெளிவுற்ற மனதென்று
நல்லோர் சொல்லார்

சச்சடிபை விட்டுவிடு முப்பொருளை யோர்பொருளாய்த்
தனித்துப் பாரு
பிச்சையென்ன விசாரமென்ன தலைமேலே சுமந்துவரப்
பெருமா னுண்டே. (56)

மனங் கேட்டல்

"அப்படி யிருக்கச் சிவசொரூபத்தைப் பெற்றிருக்கின்ற பேர்கள் ஆகாரத்துக்காகப் பலவிதங்களான தொழில்களைச் செய்கிறதும், சித்துக்கள் வித்தைகள் செய்கிறதும், பொய் சொல்லுகிறதும், சிவசின்ன வேடத்தைக் கபடமாகத் தரித்துக்கொள்ளுகிறதும் என்ன?"

அறிவு கூறல்

ஆனைமுத லெறும்புகடைக் கமுதளித்துக் காக்குமொரு
வரனே யல்லால்
சேனைவித மாகவிந்த மானிடர்கள் செய்வதெல்லாஞ்
செகத்தின் மாயை
ஊனைமுதல் சுமந்தவரார்? உண்டபின்பு களித்தவரார்?
உற்றுப் பார்க்கில்
தேனையுண்டு ருசிகண்ட திருடனைத்தான் கண்டவர்க்குத்
தெரியுந் தானே. (57)

மனங் கேட்டல்

"ஆனல், அறியலானேன்; பெரியோர்களிடத்தில் பக்தி வைராக்கியத்துடனே மிகட நேரமாகிலும் பிரியாமல் சரணடைந்து ஏவலுஞ் செய்துகொண் டிருக்கிறவர்களுக்கு எந்தப் பதவி கிட்டும்?"

அறிவு கூறல்

[வேறு]

ஆசான் கிருபை யிருந்ததனு
லந்த வுடற்போய் மறுவுடலில்
கூசா திருந்துந் தன்னண்டை
குறையொன் றில்லா நிறைவாக
தேசா நேசர் சூழ்ந்திருக்கத்
திருவோ லக்கஞ் சேவிக்க
ஈசா வென்றே மறைபோற்ற
எய்தும் பரம பதம்நெஞ்சே. (58)

மனங் கேட்டல்

"ஆனல், நிழல்போற் பிரியாமற் சரணத் தேவனுஞ் சலியாமலும் செய்கிறேன். ஐயோ! பல பிறவிகள் எடுத்தெடுத்து நொந்திருக்கிற நான் இன்னும் ஓர் பிறவி பிறப்பேனே! பிறவாமலிருப்பதற்கு மார்க்க முண்டோ? அதைச் சொல்க!"

அறிவு கூறல்

[வேறு]

உடல்பொருளு மாவியுஞ்சற் குருநா தற்கே
வுண்மையுட னுதகத்தால் தாரை வார்த்து
நடமாடு மிம்மூன்று மெனதென் றெண்ணு
நாயகனுஞ் சீவனையே யடிமை யாக்கு
திடவாக்குத் தவறுமல் நிலைத்து நெஞ்சே!
தேகந்தா னுழியுமளவு உதவி செய்தால்
படமாடு மரவத்தை யணிந்த வீசன்
பதம்பெறுவா யுள்ளபடி பகர்ந்திட் டேனே. (59)

### மனங் கேட்டல்

"ஆனால், நல்லதாயிற்று; இதுகாறும் நானே உடல், பொருள், ஆவி மூன்றுக்கு முடையவனென்று நீர் சொன்னபடி கேட்டுச் சர்வ சங்கையு மிழந்து, நிர்விகாரியாய், என்ன கெதியென்று கேட்குமளவிலே ஜீவனுண்டென்றும், ஜீவனுக்கு உடல் பொருள் ஆவி தொந்தமென்றும், அதைக் குருவுக்குத் தத்தஞ் செய்து, ஜீவனை அடிமையாக்கி, ஆசான் சொற்படி நடந்து ஜீவேசனுகிறதாய்ச் சொன்னீர்; மிகவும் சந்தோஷமாயிற்று! அப்படியே ஜீவன்முத்தி யடைகிறதானல் நான் இவ்விதம் பிரயாசப் படவேண்டிய தென்ன? நான் நீயார் இவ்வளவு சந்தேகமற்றுத் தெளிவு கொண்ட லாப மென்னவாகப் போகிறது?"

### அறிவு கூறல்

சீவனே நீயாகு மறிவு நீயாஞ்
சிவன்றானே நீயாகும் பரமு நீயாம்
தாவுகின்ற செயலுடலே மனதென் றுன்னைச்
சாற்றியதோர் நாமமாஞ் சர்வ சங்கை
மேவவே மொழிகிறது முனதால் நெஞ்சே!
மெல்லமெல்லச் சொற்படியே மேவி னக்கால்
நாவுதனிற் பிரிக்கின்ற பேத மற்று
நாம்சிவமாய் வாழலாம் நாடிப் பாரே. (60)

### மனங் கேட்டல்

"ஆனால், அறியலானேன்; இனி உடல் பொருள் ஆவி ஆகிய மூன்றையும் குருவுக்குத் தத்தம்பண்ணச் சொன்னீர்; இந்த மூன்றையுந் தெரியப்படுத்தும்."

### அறிவு கூறல்

உடலென்றாற் சடாதார வுடலே யாகும்
உயிரான பிராணனே யாவி யாகும்
திடமாக விரண்டையுந்தா னெனவிதன் றற்ற
சிவனே சிற்றம்பலப் பொருள தாகும்
அடைவாக இம்மூன்றுங் கொடுத்துத் தன்னை
அடிமையெனச் சத்தியமா யிருந்தால் நெஞ்சே!
இடமான கதிபெறவே யுபதே சிப்பார்
இப்படியே குருபதத்தி லிஷ்டம் வையே. (61)

### மனங் கேட்டல்

"அப்படியே செய்யலுற்றேன்; இனி தீக்ஷை யென்பதும், நூலென்பதும், குருசொல் என்பதும், சாதக மென்பதும், முத்தி வீடு என்பதும் தெரியச் சொல்க!"

### அறிவு கூறல்

தீக்ஷையது நூலாகும் நூல்வி ளக்காம்
திறமான சற்குருசொல் லுபாய மாகும்
தாக்குகின்ற சாதகந்தா னேணி யாகும்
சபையென்ற வெளிதானே வீட தாகும்
மார்க்கமென்ற திதுநெஞ்சே! முன்னோர் கூட
வாழ்ந்தவரு மிப்படியே மருவிப் பாரு
நோக்கையிலே யிதிலொன்று நழுவிற் றானல்
நொந்துநொந்து பிறவியினி லுழைக்கும் பாரே. (62)

### மனங் கேட்டல்

"எல்லாம் உள்ளபடி யென் றறிந்துகொண்டேன்; இனிமேல் சற்குருவினுடைய திருவுள மகிழ்ந்து நான் கடைத்தேறும் பொருட்டாய் உபதேசஞ் செய்யும்படி சொல்க!"

### அறிவு கூறல்

அப்படியே செய்விப்போ மழகு நெஞ்சே!
ஆசான்றன் திருவடிக்கே யன்ப தாக
எப்படியா கிலுமுன்னே மாயை கிட்டி
யிதம்போலாம் ஜெனனமதற் கிடங்கொ டாதே
செப்படிபோல் வந்ததொரு ஜெனன நீங்கிச்
சிவானந்த போதகமாய்த் தெளிவாய் நீயும்
மைப்படியுங் கன்னிபங்கன் குருவாய் வந்து
வாதனையைத் தீர்த்திடுவார் வணங்கு வாயே. ()

### பொது கவனிப்பு

இதுகாறுஞ் ஜீவனைப் பின்னிட்டு, மனதை முன்னிட்டு, சற்குருவைப் பின்னிட்டு, அறிவு முன்னிட்டுக்கொண்டு மனத்தினுடைய பணியறுத்து சற்குரு கடாக்ஷம் பெற்றுக்கொள்ளும் வகை கூறப்பட்டது. இனி மனதைப் பின்னிட்டு, ஜீவனை முன்னிட்டு, ஜீவனுக்குள் மன மொடுங்கி, முத்தியடையத்தக்கதாக அறிவைப் பின்னிட்டுச் சற்குருவை முன்னிட்டு, அறிவை ஜீவனுக்குப் போதித்து நீ நானென்று இரண்டில்லாத பரிபூரணமாய் ஆக்கும்பொருட்டு ஜீவனுக்குக் குரு சிவானந்தம் போதிக்கும் மார்க்கம் கூறப்படுகின்றது.

### ஜீவன் கேட்டல்

ஆதியே! அந்தமே! அருமை யான
அருட்கடலே! ஐயனே! அகண்ட முற்ற
சோதியே! சொரூபமே! சுகத்தைக் காட்டும்
சுத்தனே! சித்தனே! சுயம்பிற் பொங்கும்
பாதியே! பரமனே! பாரின் மீதே
பரம்போகச் சுந்தரமா யெழுந்து வந்த
நீதியே! என்னுடைய பிறவி நீக்கும்
நிச்சயமே! திருவடிக்குச் சரணென் றேனே. ()

## குரு சொல்லல்

தீக்ஷைமுறை யாகவே சரணஞ் செய்த
செல்வனே! ஞானமென்ற தீறம் பெற்றுப்
பாக்கியமாய் மெய்ப்பொருளைக் கொள்ள வேண்டிப்
பாரினிலே வெகுபேர்கள் பதைத்து வந்தார்
பாக்கியத்தாற் சிதறினார் சிலது பேர்கள்
பாழ்மனத்தாற் சிதறினார் சிலது பேர்கள்
தாக்கியதோர் சாதகத்தில் தாளா மற்றுன்
தவறுண்டே போயினார் சங்கை யுற்றே. (65)

சங்கையது விட்டாற்போற் றென்று பட்டு
சாத்திரத்தின் பூட்டுகளைத் தெரிந்து கொண்டு
மங்களமாய்த் தீக்ஷைதனைப் பெற்று நன்றாய்
வையகத்தின் சுழலினிலே மயங்கிச் சென்று
பங்கமா யபிமானத் தொழிலே செய்து
பதுங்கினார் குருமுகத்துக் காகா மற்றுன்
திங்களணி சடையார்தன் பாதஞ் சேர
தீவினையில் மெலிந்திட்டார் சிலது பேர்கள். (66)

அப்படியே நீநழுவித் தடத்தை விட்டே
யம்பலத்திற் கேகாமற் காலன் பாசந்
தப்பவகை யறியாமற் பிறவி தன்னிற்
சாருவையோ நிலைகொண்டு சாதிப் பாயோ
ஒப்பவே யுடற்பொருளு மாவி மூன்று
முலகத்தால் தாரைவிட்டு உனைநா னென்று
செப்பவுந்தா னுவிழுந்தே யடிமை யாகிச்
சிந்தையற்றுச் சிவமாகி வாழ்க நீயே. (67)

## ஜீவன் கேட்டல்

பாக்கியங்கள் பெறவேண்டி குருவ டிக்குப்
பதறியே வந்ததொரு பாரி லுள்ளோர்
வாக்கினால் மனத்தாலுஞ் சாத கத்தின்
வருத்தத்தாற் சிதறினபே ராரா ரையா!
நோக்கினத்திற் றவறுமறப் பிடித்து முத்தி
நுண்ணறிவாற் பூரணத்தை யடைந்த தாரோ?
தாக்கியதோர் மைந்தர்களை யறியச் சொல்லும்
தயாபரனே! குருமூர்த்தி! சொல்வாய் நாதா! ()

## குரு சொல்லல்

எத்தனையோ மைந்தர்களைப் பெற்றே னப்பா!
எடுத்துரைப்பேன் மகலையே! இன்ப மாக
பத்திவை ராக்கியமு நழுவி டாமல்
பாரிலுள்ளோர் தங்களுக்குச் சொந்த மாக
முத்திபெறு மனக்கண் ணும் பிரகா சித்து
மூதறிவால் தத்துவத்தை முழுது மாள
சத்துசித்தா னந்தமுமாய்ப் பூர ணத்தைச்
சார்ந்திட்டான் முழந்தையென்ல தங்கந் தாமே.

ஆமென்றே வந்தவர்க ளின்ன முண்டு
அவரவர்க்குத் தீக்ஷைவைத்தோ மன்ப தாக
ஓமென்ற முத்திநெறிக் கொவ்வு வாரோ?
ஒதுங்கியே பதுங்கியே யோடு வாரோ?
நாமென்ற அகங்கொண்டு நழுவிப் போறார்
நாதனையே தூஷித்தோ நலம்பெ றாமல்
போமென்றே தள்ளவில்லை யவர்கள் தானே
பொல்லாங்கைக் குறித்தல்லோ போய்விட் டாரே.

நிலைக்கவென்று வந்தவரில் தவறிப் போன
நெஞ்சகரைச் சொல்லக்கேள்! நினைவாய் நீயு
மூலைகருதிக் கைப்பிடித்துப் பாலுண் ணாமல்
மூடத்தால் நானென்ற மகத்தை யுற்றுக்
கலைகருதி நில்லாமற் சாதிக் காமல்
கற்றபொருள் போதுமென்றே பெருமை கொண்டு
கொலைகளவாம் வஞ்சகத்தை விடாமற் றானே
குலைந்திட்டான் வைத்யலிங்கன் குருநான் றானே. ()

## ஜீவன் கேட்டல்

அப்பனே! மைந்தர்கள்தன் திறத்தைக் கேட்டு
அறிந்திட்டேன் முத்திபெற்றோர்க் கடியேன் றானே
செப்பமாஞ் சரணங்கள் கோடி செய்தேன்
சிதறினவர் பால்மனமுஞ் சொல்ல வொட்டேன்
கோப்பெனவே யெனையாள விங்கு வந்த
கொற்றவனே! உனைப்போலத் துலக்கங் காணேன்
இப்பவே யடிமை கொண்டு காக்க வேண்டி
யிரங்கியே யருள்புரிவா யெந்தன் கோவே! (72)

அறிவாள னாகியே பணிய றுத்து
அச்சங்க ளெல்லாந்தா னறுத்துப் போட்டுக்
குறியாள னாகவே துணிந்து வந்த
கொடும்பாவி யெனையாளக் கூச்ச மென்றே
தறியாள னாகின்ற வுலகத் தேதான்
சங்கையது வந்தாலுந் தாள மாட்டேன்
முறியாள வந்தகுரு நாதா! உந்தன்
முகிழ்மலர்த்தாள் கெதியென்று முனைந்திட் டேனே.

## குரு சொல்லல்

நிலமதனைச் சலத்தினாற் சுத்தி செய்து
நிராமயமாங் கணபதியை நாட்டி வைத்து
பலமுடைய சோதிமலர் சாத்தி மிக்கப்
பரிவான புகைதூபங் காட்டிப் பின்னுந்
தலமுடைய வெளியதனை நிவேத னஞ்செய்
சரணஞ்செய் யென்மகனே! உபதேசிப்போம்
பிலமுடனே யிடம்வலமாய்ச் சுற்றி வந்து
பெருவிரலைப் பற்றிக்கொள் பேரின் பத்தே. (74)

அன்புடனே யுடல்பொருளு மாவி மூன்றும்
அறுதியா யளித்துவிட்டு நீதா னையா!
தென்புடனே யடிமையெனச் சத்தி யஞ்செய்!
சிதறாமல் நில்லப்பா! தீக்ஷை வைப்போம்
பின்புந்தன் செவிதானே யோனி யாக
பேசுமெந்த னுவுதா னிலிங்க மாச்சு
இன்பமுட னனுபோகத் திருக்க வென்றே
இருசெவிபி லுபதேச மேற்று வோமே. (75)

## ஜீவன் கேட்டல்

அப்படியே பஞ்சசுத்தி பூசை செய்தேன்
அழகாகச் சரணங்கள் பிரகாரஞ் செய்தேன்
செப்பினதோர் பெருவிரலைப் பற்றிக் கொண்டேன்
தேகமுடன் பொருளாவி தத்தந் தந்தேன்
ஒப்பதுவா யானுமே யடிமை யானேன்
யுகமுழுகத் தடைவரினு மசையா நிற்பேன்
தற்பரனே! தீக்ஷைசெய்யுங் கருணை வைத்து
சற்குருவே! திருவடியிற் சரணென் றேனே. (76)

## குரு சொல்லல்

[வேறு]

ஞான மென்பதில் நால்வகை யுண்டதை
நாமுரைத் திடக்கேளாய்
தான மூற்றனர் சரியையுங் கிரியையுஞ்
சாருமே சிவயோக
மோன முற்றமெய்ஞ் ஞானமே நான்கதா
முடிவதைப் பெறுவாயே
ஈன மற்றவென் மைந்தனே யுன்னிட
வின்பமே துரைப்பாயே. (77)

## ஜீவன் கேட்டல்

தேசி காவிந்த நால்வகை யென்றதை
தெரியவு முரைத்திட்டால்
மோச மாயின்ப முற்றிருப் பதுதனை
மொழிந்திடு மெனக்கேட்பேன்
ஆசை யற்றதா யிருந்திடி லுழைத்திட
வதிசயங் கொள்வேனுன்
நேச முற்றதிற் பத்தியே யுரைத்திடில்
நிலைத்திடு மையாவே. (78)

## குரு சொல்லல்

அங்க சுத்தியு மாலயந் தொழுவதுஞ்
சரியையென் றறைவார்கள்
மங்க ளத்துட னட்டமா சித்தியும்
வரையுஞ்சக் கரபூசை
பொங்க மானது கிரியையாம் வாயுவை
பிரண்டிடா திழுத்திட்டு
தங்கி நின்றதோர் யோகமென் றிதனையே
சாற்றிடு மறைதானே. (79)

ஞான மேதெனக் கேட்டிடின் தத்துவ
நானென வுணர்ந்திந்த
ஊனை நானென வுரைத்ததை யகன்றுபின்
னொழிவறத் தனைக்கண்டு
மானம் வெட்கமுந் துக்கமுங் கவலையும்
வஞ்சனை தான்போக்கி
யீன மற்றுநான் சிவமெனத் துணிந்தது
மிழந்தது முடிவாமே. (80)

ஜீவன் கேட்கக் குரு சொல்லல்

இந்த நாவினி லின்பமுற் றிருக்கையி
லிச்சடம் விழுந்திட்டால்
தொந்த மானதோர் பலனென்ன தெரிந்திடச்
சொல்லுவாய் குருமூர்த்தி!
சொந்த மாகவே கேள்மக னேயதன்
சுகமதை யறிவிப்போம்
தந்த னங்களாய் விடாமலே கேட்பது
சரியென மகிழ்ந்தேனே. (81)

சரியை யென்பது குறைவறச் செய்துமே
தன்கடம் விழுந்திட்டால்
கிரியை செய்யவே யெடுத்திடுங் கடமது
கிரியையு முடிந்தேகில்
உரிசை யாகிய யோகமே செய்யவு
முடலெடுத் துழைக்குங்காண்
பரிகொள் யோகமு முற்றவு முடிந்துடற்
பாரினி லுருவாமே. (82)

ஞான மேபெற வெடுத்திடு மவ்வுடல்
நழுவிடா துரைத்திட்டாம்
லீன மாகிய செனனமும் போக்கிடு
மீசனே தானாகி
வான முற்றதோர் சச்சிதா னந்தமாய்
வாக்குரைக் கெட்டாத
மோன முற்றுதா னெங்குமாய் நிறைந்தது
முத்தியென் றுணர்வாயே. (83)

ஜீவன் கேட்டல்

அப்ப னேயென்னை யடிமையாக் கொண்டவோ
ரழகுள்ள குருமூர்த்தி!
தப்ப வேகெதி வேறெனக் கில்லைநின்
னுள்ளது கெதியென்றேன்
ஒப்ப வேசிவ ஞானமு முணர்ந்திடீ
னுகந்ததி லூன்றிக்கொண்
டிப்ப வேபர வீடதி லேகுவ
னீசனே யருள்வாயே. (84)

குரு சொல்லல்

[வேறு]

தத்துவ மேயுடல் தானெனு மானது தன்னைய றிந்திடுநீ
சித்தது வாயபி ராணனி ரானதில் திரண்டதைக் கண்டிடுநீ
கற்றுமே காணக் கண்மணி யானதை கண்டுதெ ளிந்திடுநீ
முற்றுசி வானந்த போதக மானது முத்தியு மிதுதானே.()

[வேறு]

அறிவுபோ தகமென்ற நூலைப் பாரு
அதற்குமுன்னே உடலறியும் விளக்கம் பாரு

பிறிவின்றி மேவின்றி மறைப்பு மின்றிப்
பேரின்ப அமுதமழை பெய்த நூல்தான்
நெறிகொண்ட அந்நூலை யிசைந்து பாரு
நிலைக்கவே யப்படியே தீக்ஷை வைப்போம்
பொறிவிட்டுச் சபைபுகுவாய் பிக்கோ யில்லை [ளே.
பெரும்பொருளைக் கைக்கொண்டு பிழைத்துக் கொள்

ஜீவன் கேட்டல்

அப்படியே போதிக்க முத்தி பெற்றேன்
அரியயனுங் காணாத வடிவுங் கொண்டேன்
தப்பியே யிளைக்காமற் பிழைத்துக் கொண்டேன்
சஞ்சலத்தை யிழந்துநான் சுகத்தைப் பெற்றேன்
ஒப்புவமை சொல்லவொரு வரையுங் காணேன்
உனைப்போலே தெளிவுரைக்குங் குருவுங் காணேன்
செப்பவே நாவிழந்தேன் பரமா னந்தத்
தீவிலே சேர்ந்திட்டேன் வாழ்ந்திட் டேனே. (87)

ஞானியென்ற பெயர்களையே கண்டு கொள்ள
நல்லதொரு கண்பெற்றேன் பேச வென்று
லீனமறச் சொற்கற்றேன் சிரவ ணத்தால்
ஏகாந்த பரகவன மெய்த லானேன்
மானமற்ற வடியருட னுசை கொண்டேன்
மருவுமுடல் குருவுக்கே வணங்கிப் பெற்றேன்
தானமுற்றேன் சிவானந்தந் தனிலே நின்றேன்
சச்சிதா நந்தனென்றே தழைத்திட் டேனே. (88)

வாழ்வுமுதற் சம்பத்தை மதித்தி டாமல்
மலைமேலே யேறினதோர் பறவை யானேன்
தாழ்வுகளா யுலகோர்சொல் நிந்தை யெல்லாம்
சகாயமென்றே யெண்ணிச்சந் தோஷ மானேன்

வீழ்வுதரு நரகிலுள்ள மாண்பர்க் கெல்லாம்
வீழாமலேமனிதர் மேலு மானேன்
ஏழுலகும் மேலேழும் நானே யானேன்
ஏகாந்தத் தீவினிமேல யிறங்கி னேனே. (89)

## குரு சொல்லல்

மைந்தனே புனைப்போல வோடி மெள்ள
வாதனையே தீர்ந்துமதி மயங்கி டாமல்
பந்தமறுத் தேபின்பு குருவைத் தேடி
பரமாகி வாழ்ந்தவர்க ளுண்டோ? அப்பா!
சிந்தையற்ற பெரியோரை வணங்கிக் கொள்ளு
சிவஞானி தன்னுடனே நேசஞ் செய்தே
எந்தனையே பெற்றவனை யப்பா வப்பா
எடுத்தணைத்தே யம்பரத்தி லிருப்போம் நாமே. ()

## ஜீவன் கேட்டல்

[வெண்பா]

மறந்தேனோர் வார்த்தை மகிழ்ஞான மூர்த்தி
துறந்தே னினித்தெரியச் சொல்வாய் சிறந்திலகு
பத்திசெய் வோருக்குப் பலனை தகைக்கெடுக்கும்
குத்திருக் கென்ன குணம். (91)

## குரு சொல்லல்

[விருத்தம்]

எண்ணிலாத் தவங்க ளியாகங்கள் செயினுமீஸ்
வரவிஷ்ணு வாலயங்கள்
பண்ணுலாக் கவிதை பாடினு மனேகம்
பாரினில் வரும்பலனே து

கண்ணுலா வியநற் சுருதிமெய்ப் பொருளைக்
கண்டர னடியாருக்
குண்ணலா மெனவமு தளித்தவ னடைபல
னுரைக்கவு முடியாதே. (92)

வேத மாகம சாத்திர புராணங்கள்
விரிந்தநூ லறிந்திடாவிந்து
நாதமே யுருவா மத்விதா னந்த
ஞானமே பெற்றிடவேண்டின்
ஓதவல் லவர்சத் துச்சித்தா னந்த
முற்றநல் லடியோர்க்குப்
பாத பூஜைக ளடங்கலுஞ் செய்தவர்
பலனுரைக் கடங்காதே. (93)

[கலித்துறை]

அன்ன மளிப்பாரைக் கலைப்பாரு மிந்த வவனிமிசை
பின்ன லவர்க்குப் புரிவார் நினைப்பா ரிகழ்ந்திடுவார்
மன்னவ ராயிருந் தேமறிப் பாரையு மறலியினி
யென்னென்ன வேதனை செய்வான் முடிவி லியம்பரிதே. ()

சிவனருள் பெற்றுயர் மேலோர் தமக்குஞ் சிவனையுன்னித்
தவஞ்செயு மன்பர்க்குஞ் சிவவேடம் பூண்ட தன்னியர்க்கு
முவந்தே பணிபுரி வார்மேலுக ருண்மையதாய்
அவஞ்செய் தவரை யிகழ்வோ ரடைவ ரருநரகே. (95)

பெரியோர்க்குத் தொண்டு செய்வாரைத் தடுத்திடும் பேதையரும்
திரியா நடுநிலை சார்ந்தவர்க் கல்லல் சமைப்பவரும்
பரிவான தீட்சை கொண்டோரை மறிக்கும் பாதகரும்
எரிவாய் நரகத் தெண்ணிற் றுயரி லிருப்பரென்றும். (96)

[வெண்பா]

இந்நூலைப் பார்ப்போர் எடுப்போர் படிப்போர்
நன்னூ லெனமனதி னுடுவோர்—பொன்னூற்
படியேறித் தாண்டிப் பவசா க்ரத்தைக்
கடவுளுக்கு முன்னிற்பர் காண். (97)

சந்தேக மாதிகளைச் சாராம லேயகற்றிப்
பந்தபா சங்களைப் பாழாக்கும்—இந்தநூல்
எந்தநா ளும்மழியா யேகாந்த வீடதனைச்
சொந்தமாக் கும்மெனவே சொல். (98)

[கலி விருத்தம்]

அரனங் கிரிவாழி யம்பிகைதாள் வாழி
பெருமான் பதம்வாழி பின்னைசர ணம்வாழி
பரமேட்டி யடிவாழி பாரதிபா தம்வாழி
கரிமுகன் கழல்வாழி கந்தன்திரு வடிவாழியே. (99)

[கொச்சகம்]

வான்வாழி வானையளி மாதவரும் வாழி
கோன்வாழி குருவாழி குவலயத்தோர் வாழி
ஆன்வாழி யமரர்முத விருடிசித்தர் வாழி
நான்நீயெ னகமற்ற நாதாக்கள் வாழி. (100)

சிவானந்த போதம் முற்றிற்று.

சற்குருவே துணை

-600 008

உ

சிவமயம்

## சிவானந்த போதத்தின்

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி


| செய்யுள் | பக்கம் |
|---|---|
| **அ** | |
| அங்கசுத்தியு | 44 |
| அஞ்சுகின்ற | 29 |
| அடியருக்கு | 27 |
| அப்படியேசெய் | 39 |
| ,, நீ | 40 |
| ,, பஞ்ச | 43 |
| ,, போதி | 47 |
| அப்பனே! மைந் | 42 |
| அப்பனேயெனை | 46 |
| அரணங்கிரி | 50 |
| அவரெல்லா | 12 |
| அறிவதனை | 2 |
| அறிவாளனாகியே | 42 |
| அறிவுக்கே | 15 |
| அறிவுபோதக | 46 |
| அன்புடனே | 43 |
| அன்னமளிப்பா | 49 |
| **ஆ** | |
| ஆசான்கிருபை | 36 |
| ஆணுக்கும் | 29 |
| ஆதியே! அந்தமே! | 39 |
| ஆமென்றேவந்த | 41 |
| ஆனநெஞ்சமே | 4 |
| ஆனைமுத | 35 |
| **இ** | |
| இசைகுறுகி | 2 |
| இச்சையுட | 34 |
| இந்தநாவினி | 45 |
| இந்நூலை | 50 |
| இருவினையுஞ் | 21 |
| இவ்வளவுந் | 27 |
| இன்னமின்னம் | 30 |
| **உ** | |
| உடலென்றுற் | 38 |
| உடல்பொருளு | 36 |
| உறுதிகொண்ட | 22 |
| **எ** | |
| எண்ணிலா | 48 |
| எத்தனையோ | 41 |
| எழுவகையின் | 7 |
| **ஐ** | |
| ஐயமின்றி | 20 |
| **ஒ** | |
| ஒருவர்செய்த | 10 |
| ஒருவர்தின | 22 |
| **ஓ** | |
| ஓம்நமசிவாய | 33 |
| **க** | |
| கருவியகன்றிவ் | 17 |
| **கா** | |
| காயமனவாக்கி | 33 |
| காயமனவாக்கு | 13 |
| **கு** | |
| குவலயத்தோர் | 32 |
| குற்றமேதுங் | 20 |
| **கே** | |
| கேணீநெஞ்சமே | 6 |
| **ச** | |
| சங்கையது | 40 |
| சந்தேகமாதி | 50 |
| சரியைமுதன் | 24 |
| சரியையென்ப | 45 |
| சன்னியாசி | 25 |
| **சா** | |
| சாதிபேதம் | 18 |
| சாயுச்சியமுத்திரை | 25 |
| **சி** | |
| சிவனருள்பெற் | 49 |
| சிவானந்த | 1 |

| செய்யுள் | பக்கம் |
|---|---|
| **சீ** | |
| சிவனேசியாகு | 37 |
| **சு** | |
| சுத்தநெஞ்சமே | 52 |
| **சே** | |
| சேறுபோல்தள | 21 |
| **ஞா** | |
| ஞானமென்ப | 44 |
| ஞானமேதென | 45 |
| ஞானமேபெற | 46 |
| ஞானம்பதியா | 18 |
| ஞானியென்ற | 47 |
| **த** | |
| தத்துவமேயுடல் | 46 |
| **தி** | |
| தியாகாருள் | 1 |
| **தீ** | |
| தீக்ஷைமுறை | 40 |
| தீக்ஷையது | 38 |
| **தெ** | |
| தெளிந்ததுறவி | 16 |
| **தே** | |
| தேகந்தனிற் | 12 |
| தேகமெடுத்த | 14 |
| தேசிகாவிர்த | 44 |
| **ந** | |
| நரஜன்மத்தை | 9 |

| செய்யுள் | பக்கம் |
|---|---|
| **நா** | |
| நாலுவகை | 6 |
| **நி** | |
| நிலமதனை | 43 |
| நிலைக்கவென்று | 42 |
| நிறைந்தபரி | 2 |
| **நீ** | |
| நீதானேயறிந் | 23 |
| **ப** | |
| பணியறுத்த | 1 |
| பத்திநிலை | 3 |
| பன்னுமறை | 3 |
| **பா** | |
| பாக்கியங்கள் | 41 |
| பாசபந்தமான | 10 |
| **பு** | |
| புகர்ச்சமய | 15 |
| புலித்தோலை | 28 |
| **பெ** | |
| பெண்ணாலும் | 11 |
| பெரியோரைச் | 16 |
| பெரியோரைப் | 19 |
| பெரியோரையி | 19 |
| பெரியோர்க்கு | 49 |
| **பொ** | |
| பொன்னினெ | 31 |

| செய்யுள் | பக்கம் |
|---|---|
| **ம** | |
| மரப்பசுவின் | 28 |
| மறந்தேனோர் | 48 |
| மறப்பானமூன் | 23 |
| மனவாக்கு | 9 |
| மனிதரிலும் | 7 |
| **மா** | |
| மாமெக்களுஞ் | 5 |
| **மு** | |
| முத்திபெறு | 1 |
| " | 4 |
| முந்திபரிபூரண | 13 |
| முந்தவிருந்த | 17 |
| முந்தஜன்மமாம் | 8 |
| **மை** | |
| மைந்தனேயுனை | 48 |
| **யா** | |
| யாவரிருக்கு | 14 |
| யாவர்களும் | 26 |
| **வ** | |
| வஞ்சனைபொய் | 34 |
| **வா** | |
| வாழுமாலய | 9 |
| வாழ்வுமுதற் | 47 |
| வான்வாழி | 50 |
| **வே** | |
| வேதமாகம | 49 |


செய்யுள் முதற்குறிப்பு அகராதி முற்றிற்று.

---

FIRST EDITION] [1000 COPIES.

| | அ. | ப. |
|---|---|---|
| தேவார திருவாசகத்திரட்டு | 8 | 0 |
| சிவநாமாவளித் திரட்டு | 3 | 0 |
| சிவாநந்த மாலை | 4 | 0 |
| ஸ்ரீ தத்துவபோதம் | 1 | 0 |
| நாஞ்ஜீவவாதக்கட்டளை | 1 | 0 |
| ஷை (செய்யுள்) | 1 | 0 |
| கட்டளைப்பிரபந்தம் (14 கட்டளைகள்) | 8 | 0 |
| சைவ சித்தாந்த வரலாறு | 4 | 0 |
| சித்தாந்தப் பிரகாசிகை | 2 | 0 |
| பஞ்சீகரண வேதாந்த சித்தாந்தம் | 2 | 0 |
| சித்தாந்த தத்துவ லக்ஷணம் | 0 | 9 |
| பஞ்சாக்ஷரப் பதிபசுபாசம் | 1 | 6 |
| ஞானத்தின் பிரிவுகள் | 2 | 0 |
| ஓங்காரத்தின் மகத்துவம் | 1 | 0 |
| அஷ்டாக்ஷர மகத்துவம் | 1 | 0 |
| ஏகாந்த சேவை | 1 | 0 |
| கலியுக தர்மம் | 1 | 6 |
| ஆரியர் சந்தியாவந்தனம் | 1 | 0 |
| பாரத நீதி | 2 | 0 |
| திருமங்கல்யதாரணவிதி | 0 | 6 |
| பிள்ளைத் தாலாட்டு | 0 | 6 |
| ஜாதிபேத விளக்கம் | 2 | 0 |
| விஷப்பிரதி விஷத்திரட்டு | 2 | 0 |
| தன்வந்திரி நாடிசிந்தாமணி | 2 | 0 |
| இராஜயோக வித்யா வினாவிடை | 1 | 0 |
| சிவநாமாத்விதக் கீர்த்தனை | 8 | 0 |
| கீதாசாரத் தாலாட்டு | 1 | 0 |
| யாப்பிலக்கண வினாவிடை | 4 | 0 |
| அணியிலக்கண வசனம் | 4 | 0 |
| வச்சணந்திமாலை உரை | 2 | 0 |

| | அ. | ப. |
|---|---|---|
| ஸ்ரீ விநாயக ரகவல் | 1 | 6 |
| சிவபோக சாரம் | 2 | 6 |
| சிவாநந்த போதம் | 4 | 0 |
| பரமாநந்த தீபம் | 1 | 0 |
| சிவஞான தீபம் | 4 | 0 |
| ஏரெழுபதும், செம்பொற் சிலை எழுபதும் | 4 | 0 |
| ஈட்டி எழுபது உரை | 4 | 0 |
| தமிழறியும் பெருமாள் கதை | 6 | 0 |
| 108 திருப்பதித் திருப்புகழ் | 8 | 0 |
| அஷ்டப் பிரபந்த மூலம் | 12 | 0 |
| நைடத மூலம் | 12 | 0 |
| ஔவைகுறள் மூலம் | 2 | 0 |
| கைவல்லிய நவநீத மூலம் | 3 | 0 |
| வேதாந்தசூளாமணி மூலம் | 3 | 0 |
| சுகர் கைவல்லியம் | 3 | 0 |
| மீனாக்ஷியம்மன் பிள்ளைத் தமிழ் மூலம் | 3 | 0 |
| சிவசிவவெண்பா முதலிய | 8 | 0 |
| சீகாளத்திக் கலம்பகம் | 2 | 0 |
| ஸ்ரீ வைஷ்ணவ சமயதீபம் | 0 | 9 |
| ஸ்ரீவிநாயகசிவசத்திகவசம் | 1 | 0 |
| பக்தி (இன்னதென்பது) | 2 | 0 |
| ஒருதுறைக் கோவை | 4 | 0 |
| குடாரம்: (குறள் விஷயம்) | 1 | 0 |
| அம்மணீயம், ஐயாசாமீயம் | 8 | 0 |
| விவேக சிந்தாமணி உரை: | | |
| 1-ம் பாகம் | 8 | 0 |
| 2-ம் பாகம் | 10 | 0 |
| பஞ்சதந்திர வசனம் | 10 | 0 |
| ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை விருத்தியுரை | 12 | 0 |

ரிப்பன் புஸ்தகசாலை, 87, தம்புசெட்டி வீதி, சென்[illegible]

ஸ்ரீ விவேகாநந்த விஜயம்: ஸ்ரீ விவேகாநந்த ஸ்வாமிகள[illegible] திவ்விய சரித்திரமும், அவர் செய்த அற்புதமான பிரசங்க[illegible]திரட்டும்: விலை ரூபா 1-12-0

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்: ஸ்ரீ விவேகாநந்த ஸ்வாமிகளின் குருமூர்த்தியாகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் திவ்விய சரித்திரமும், கதாமிருதமும், உபதேச வாக்கியங்களும்: விலை ரூபா 1-4-0

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சரித்திரம்: ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் ஜனனமுதல் மஹா சமாதி வரையில் உள்ள விரிவான சரித்திரம்: விலை ரூபா 2. ஸ்ரீ விவேகாநந்தர் விரிவான சரித்திரம்: ரூபா 2

ஸ்ரீ சங்கர விஜயம்: ஆதி சங்கராசாரியர் திவ்விய சரித்திரம் (ஸ்ரீ சங்கரர், சாரதாம்பாள் படங்களுடன்) விலை ரூபா 1-4-0

திவ்விய தேச யாத்திரையின் சரித்திரம்: ஆரிய தேசமாகிய நமது இந்தியாவிலுள்ள திவ்விய ஸ்தல, திவ்விய தீர்த்த, திவ்விய பர்வதாதிகளின் மஹிமையும் விசேஷங்களும்: முதல் பாகம் (வட தேசங்கள்) விலை ரூபா 2-0-0

தக்ஷிண இந்தியா சரித்திரம்: ஷை 2-ம் பாகம் (தென் தேசங்கள்) விலை ரூபா 5-0-0

பட்டினத்துப் பிள்ளையார் என்னும் திருவெண்காட்டடிகள் சரித்திரம்: விலை அணா 12

ஸ்ரீ பக்தலீலாம்ருத வசனம்: 82 பக்தர்களின் திவ்விய சரித்திரம் விலை ரூபா 3. ஸ்ரீ ராமாநுஜர் திவ்விய சரித்திரம்: விலை ரூபா 2

பெரியபுராண, திருவிளையாடற் புராண வசனச் சுருக்கம்: பாக்கெட் அளவு: விலை ரூபா 1-4-0

சிவக்ஷேத்திர விளக்கமும், சிவக்ஷேத்திராலய மஹோத்ஸவ உண்மை விளக்கமும்: ஒவ்வொரு க்ஷேத்திரமும் இருக்கும் இடத்தையும், அதன் சமீப ரயில்வே ஸ்டேஷனையும் காட்டும் விவரமான அட்டவணையுடன்: விலை ரூபா 1-8-0